## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.6/2021.
Prosecution witness for P.W. 5 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. சரவணன்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.02.2026.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோவில்பட்டியில் குடியிருந்து கட்டிட பொறியாளராக தொழில் செய்து வருகிறேன். கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க கோவில்பட்டி ஸ்ரீராம் நகர் 5 வது தெருவில் கிருஷ்ணசாமி பாண்டியன் என்பவர் வீடு சேதமடைந்திருந்ததால் சேத மதிப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதால் ரூ.1,52,000/- மதிப்புள்ள சேதம் ஏற்பட்டிருப்பதாக நான் கொடுத்த சான்றிதழ் **அ.சா.ஆ 6**. ஒரு வீட்டில் கதவு, ஜன்னல், தொலைக்காட்சி பேட்டி, ஹோம்தியேட்டர், மரஅலமாரி, உலோக அலமாரி ஆகியவை சேதமடைந்திருந்தது. மற்றொரு வீட்டில் மிக்சி, கிரைண்டர், வாசிங் மெசின் ஆகிய பொருட்கள் சேதமடைந்திருந்தது. இரண்டு வீடுகளிலும் ஏற்பட்ட சேதங்களுக்கு சேர்த்து அ.சா.ஆ 6 நான் வழங்கினேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

நான் கோவில்பட்டி நகராட்சியின் உரிமம் பெற்ற மதிப்பீட்டாளர். 12.03.2011 அன்று நான் மேற்படி சான்றிதழை வழங்கினேன். முந்தையநாள் ஆய்வாளர் எனக்கு கைபேசி மூலம் தொடர்பு கொண்டு

சேதமதிப்பு வழங்க வேண்டுமென்று சொன்னார். சேதமடைந்த பொருட்களின் ரசீதுகளை நான் பார்க்கவில்லை. நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றும், அதனால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க அ.சா.ஆ 6 சான்றிதழை சேதம் ஏற்பட்டதுபோல காட்டி வழங்கியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.13 18:59:36 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.